A/L 88
பிரிவு II
Physics - திரு.
Chemistry - திரு.
Zoology - திரு.
Botany - திரு.
Pure & Applied Maths
திரு.
விபரங்கட்கு
New Master Institute
B.M.C. Lane, JAFFNA

Registered as a Newspaper

உதயன்

விலை ரூ.1/=

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

A/L 88
பிரிவு III
விரைவில் ஆரம்பம்.
விபரங்கட்கு:–
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

கடிதம்: 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு வைகாசி மீ 12 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1406 றம்ழான் பிறை 16 (26 05 1986) UTHAYAN- A LIVELY TAMIL DAILY கதிர்: 16

ஐ. நா. சபைக்கு இனப்பிரச்சினை

அரசு எடுத்துச் செல்லும் என்று பிரதி அமைச்சர் தகவல்

லண்டன், மே 25

இனப் பிரச்சினையை இலங்கை அரசாங்கம், அவசியம் ஏற்படும் பட்சத்தில் ஐக்கிய நாடுகள் சபைக்கு எடுத்துச் செல்லும்

இவ்வாறு இலங்கையின் பிரதி வெளிநாட்டு அமைச்சர் திரு டிரோன் பெர்னாண்டோ ஏதென்ஸில் வைத்துத் தெரிவித்தார்

இந்தத் தகவலை சர்வதேச செய்தி ஸ்தாபனங்களில் ஒன்றான டான்யுக் செய்தி நிறுவனம் வெளியிட்டது

பிரதி அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ மேலும் சொன்னதாக டான்யுக் அறிவித்ததாவது:–

இலங்கையில் இடம் பெறும் இன மோதல் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே நடைபெறும் ஒரு தனி தமிழ்த் தேசிய விடுதலைக் குழுவுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே நடைபெறும் மோதல் தான் அது.

தமிழர்களின் மிகக் குறைந்த எண்ணிக்கை பின்னர் தமிழ் ஈழம் கோருகின்றனர்.

ஸைப்பிரஸ் நிலைமை இலங்கையில் உருவாவதை நாம் விரும்பவில்லை. ஆனால் தமிழர் பிரச்சினையை ஐ நா சபைக்கு இலங்கை கொண்டு செல்லும் — என்றார்.

இராணுவ நடவடிக்கைகளை நிறுத்த

இலங்கை அரசு விதிக்கும் நிபந்தனை

கொழும்பு, மே 26

போராளிகள் தங்கள் நடவடிக்கைகளை நிறுத்தி விட்டால் தான் இலங்கை தனது இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தும்.

இப்படி இலங்கை இந்தியாவுக்கு அறிவித்தள்ளது

இந்தியத் தூதர் டி லிற்றி க் திரு ஜெயவர்த்தனாவை இந்தவண்ணம் தெரிவித்தார்.

இராணுவ நடவடிக்கைகள் தொடர்கிறது குமாரணி இந்தியா தனது நல்லாதரவை வாரஸ் வரவேண்டும் என்று திரு. டி. லிற் அங்கையில் திரு ஜெயவர்த்தனாவிடம் தெரிவித்திருந்தார் அவர்!

அப்போதே திரு ஜெயவர்த்தனா மேற்கண்ட தகவலை

(4 ஆம் பக்கம் பார்க்க)

தமிழ் அகதிகளை இலங்கைக்கு அனுப்பாதீர்

மன்னிப்புச் சபை மீண்டும் வேண்டுகோள்

ஜெனீவா, மே 25

இலங்கையில் அரச படையினரின் அநீதியான செயல்களும் மனித உரிமை மீறல்களும் தொடர்கின்றன.

ஆகவே அகதிகளாகத் தஞ்சம் அடைந்தவர்களை அந்த நாடுகள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பக் கூடாது.

இப்படி சர்வதேச மன்னிப்புச் சபை சம்பந்தப்பட்ட நாடுகளிடம் மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளது

இலங்கையில் 1975 வரை இடம்பெற்ற சம்பவம் முதல் 1986 மார்ச் மாதம் வரை, கொலைகள், காணாமற் போனவர்கள் பற்றிய விபரங்களை ஒன்றாக சர்வதேச மன்னிப்புச் சபை ஆண்டவையில் வெளியிட்டுள்ளது அந்த விபரங்களிலேயே மேற்கண்ட வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் வெளித் தொடர்புகள் இன்றி வைக்கப்படுகின்றனர். தெற்கிலுள்ளவர்களுக்கப்பாலுள்ளவர்கள் எத்தனை என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

பொலீஸாருக்கும் இந்தக் கதி!

நல்லூர், மே 26

பண்ணை பொலீஸ் விடுதியில் தங்கியிருந்த பொலீஸ் அதிகாரிகள் மீண்டும் தனது விடுதிகளுக்குச் சென்று முடியாத நிலை ஏற்பட்டுள்ளது

இந்த விடுதி வீதி வேலைகள் முகாமில் இருந்து வந்த பொலீஸ்கள் தங்கியிருப்பதே இதற்குக் காரணம்.

இதனால் 25 க்கும் அதிகமான தமிழ் பொலீஸார் மீண்டும் வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் தங்களது விடுதிகளில் இருக்கும் தமது உடைமைகளை கூட எடுக்க முடியாத நிலையில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இது சம்பந்தமாக பாதிக்கப்பட்ட பொலீஸார் உயரதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு முறைப்பாடாகவும் சொல்லப்படுகிறது

8 பெண்கள், 3 குழந்தைகள் உட்பட 20 பேர் சுட்டுக்கொலை

மகாவிளாங்குளத்தில் சம்பவம்

திருகோணமலை, மே 26

திருகோணமலை மாவட்டத்தில் மாகாவிளாங்குளம் பகுதியில் இன்று தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 19 சிங்களவர்கள், ஒரு தமிழர் மரணமானார்கள்.

இவர்களில் 11 பேர் ஆண்கள்; 8 பெண்கள். மூன்று பேர் குழந்தைகள்

நேற்று காலை 12.30 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றது.

இது சம்பந்தமான மரண விசாரணைகள் நேற்றுக் காலை முதல் மாலை வரை நடைபெற்றன

(4-ஆம் பக்கம் பார்க்க)

மகாவிளாங்குளத்தில் புதிய படை முகாம்

திருகோணமலை, மே 26

திருகோணமலை மாவட்டத்தில் மகாவிளாங்குளம் பகுதியில் ஆயுதப் படை முகாம் ஒன்று அமைக்கப்படும்.

இதற்கான நடவடிக்கைகளை பாதுகாப்பு வட்டாரங்கள் மேற்கொண்டுள்ளன

இன்று தெரியாத நபர்கள் 20 பேரைக் கண்டு கொன்ற சம்பவத்தைத்

(4–ஆம் பக்கம் பார்க்க)

ஆமர் வீதியில் குண்டுப் புரளி

கொழும்பு, மே 26

கொழும்பு ஆமர்வீதிச் சந்தி குண்டுப்புரளியால் நேற்று மாலை அல்லோலகல்லோலப்பட்டது.

சந்தியில் ஒரு பிரமாண்டமான, சிமெந்துப்பை ஆயுதம் காணப்பட்டது

அவற்றைக் கண்டவுடன் பொதுமக்கள் பதறி ஓடி தொடர்கிறார். இராணுவம் தகவல் கேட்டதும் அந்த இடத்தைக் வந்து பைகளைச் சோதனையிட்டும் பார்த்தது.

உள்ளே தேவையில்லாதது கண்டுபிடிக்கப்பட்டது.

கொழும்பு ஜஸ் தாகதம்

யாழ்ப்பாணம், மே 26

மகாவிளாங்குளத்தில் நடந்த சம்பவங்களை எடுத்து நேற்று யாழ்களிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் பஸ்கள் வவுனியாவில் சுமார் 5 மணி நேரம் தாமதித்து நின்றன

நண்பகல் 12 மணிக்கு வவுனியா சென்ற பஸ்கள் மாலை 5 மணியளவிலேயே அங்கிருந்து கொழும்பு நோக்கி புறப்பட்டன.

இராணுவ அதிகாரி மாற்றம்

கொழும்பு, மே 26

ஆயுதப்படைக் கூட்டு தலைமைப் பேச்சாளராக புதிய இராணுவ அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கேர்னல் தயா விஜய சேகர என்பவருக்கே அந்த நியமனம் கிடைக்க விருக்கிறது

இதுவரை காலமும்

(4–ஆம் பக்கம் பார்க்க)

சிதம்பரம் குழுவின் அறிக்கை இரகசியமாக வைக்கப்பட்டது ஏன்?

கருணாநிதி கேள்வி

சென்னை, மே 25

தெற்கிலுள்ள குழுவின் அறிக்கை ஏன் ரகசியமாக வைக்கப்பட்டுள்ளது? அப்படி வைக்கப்பட்டுள்ளதன் மர்மம் என்ன?

இப்படி தி மு க. தலைவர் கலைஞர் மு கருணாநிதி கேட்டார்.

நேற்றுமாலை செய்தியாளர் மாநாடு ஒன்றில் கலந்து கொண்ட திரு. கருணாநிதி மேற்கண்ட கேள்வியை எழுப்பினார்.

இலங்கையில் சமாதானம் நிலவுவதற்கு தமிழர் ஒருமனதாக கொள்கை எடுக்கின்றனர். இந்திய அரசுக்கு இதனால் என்ன பாதிப்பும் இல்லை தமிழர் நிலை குறித்து

(4–ஆம் பக்கம் பார்க்க)

ராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி விட்டோம்

அரசு அமெரிக்காவுக்கு அறிவிப்பு

வாஷிங்டன், மே 25

இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி விட்டோம்.

இப்படி இலங்கை அரசு அமெரிக்க ராஜாங்க அமைச்சுக்கு அறிவித்துள்ளது.

இராணுவ நடவடிக்கைகளை விரைந்து இந்தியாவின் நல்லெண்ணத்தைப் பயன்படுத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள் — இப்படி அமெரிக்க ராஜாங்க அமைச்சு அறிவுரைகள் இலங்கையைக் கேட்டிருந்தனர். அது பற்றிய செய்தி சஞ்சிகையில் வெளியாகி இருந்தது.

அதற்குப் பதில் அளிக்கையிலே இலங்கை அரசு இராணுவ நடவடிக்கையை நிறுத்தி விட்டதாக அறிவித்துள்ளது.

இந்தக்கூடி அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

கோட்டைக்கு குழாய் நீர் தடை?

நல்லூர், மே 26

யாழ்ப்பாணக் கோட்டைக்கு செல்லும் குடிநீர் விநியோகம் இன்னும் சொஷ்டி ஒன்று தடுக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது

யாழ்ப்பாணக் கோட்டைக்கு பல காலமாக யாழ் மாநகரசபையினால் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது

இன்னும் சொஷ்டியினர் இந்த வாரத்தில் கோட்டைக்கு செல்லும் குடிநீர் முழுமையாகத்தடை செய்யப்பட்டுள்ளதாக அறிய வந்துள்ளது.

கோட்டைக்குள் பல வெளிநாட்டவர்கள் இருந்தாலும் தனது கையிலே நீர்க் கிணறு இருப்பதால் இந்தக் குழாயினூடாக வரும் குடிநீரினை மட்டுமே அவர்கள் குடிப்பதற்கு பயன்படுத்தி வந்தனர்

எயர்லங்கா சேவைகள் அடுத்தடுத்து ரத்தானது!

போதிய பிரயாணிகள் இல்லை!!

கொழும்பு, மே 26

இரண்டு தினங்களில் எயர்லங்காவின் மூன்று விமான சேவைகள் கடைசி நிமிடத்தில் ரத்துச் செய்யப்பட்டன.

போதிய பயணிகள் இல்லாத காரணத்தினால் தான் இச்சேவைகள் ரத்துச் செய்ய நேர்ந்தது என்று எயர்லங்கா வட்டாரங்கள் தெரிவித்தன

சனிக்கிழமை டோக்கியோவிற்குச் சென்ற விமான சேவையும் இந்த எயர் லங்கா விமானசேவை ரத்தானது ஆக 4 பயணிகள் மட்டுமே அந்த விமானத்தில் டோக்கியோ சென்ற ஆசாமிகளாம் மதியு செய்து இருந்தனர் அன்றைய தினம் மாலையிலும் சென்ற இருந்த எயர் லங்கா விமானத்தின் பய

(4–ஆம் பக்கம் பார்க்க)

முழு நாட்டிலும் யுத்த நிலைமை

3, 4 மாதங்களில் உருவாகுமாம்

கொழும்பு, மே 26

இன்னும் 3 4 மாதங்களில் முழு நாட்டிலும் போருக்கான பிரச்சினை உருவாகும்.

இப்படி பிரபல சிங்கள சோதிடர் சரதால ஜெயசேகர ஆருடம் கூறியிருக்கிறார்.

நேற்று கொழும்பில் வெளியான 'சண்டே ஐலண்ட்' ஆங்கில வார இதழில் இந்த ஆருடம் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

ஆருடத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

முழு நாட்டிலும் 3, 4 மாதங்களில் போருக்கான பிரச்சினை உருவாகும். [மேலும் நிலைமை எதிர்கொள்வதற்கான நிர்வாக அமைப்பில் மாற்றத்தேவை குழிந்து ஏற்படும்.

உண்மையில் அரசுக்கும் அதன் உறுப்பினர்களுக்கும் கெடுதான

(4–ஆம் பக்கம் பார்க்க)

மற்றொரு முஸ்லிம் மரணம்

கொழும்பு, மே 26

கொழும்பு வெளிநாட்டு மோதலில் காயமடைந்த இந்த முஸ்லிம் நபர் ஒருவர் நேற்று மரணமானார்.

இந்தக் மோதலில் இறந்த முஸ்லிம்களின் தொகை 8 ஆக அதிகரித்தது

தற்காலிக முகாம்

கொழும்பு, மே 26

யாழ்ப்பாணக் கோட்டை இராணுவ முகாமிலிருந்து கண்டைநிலப் பகுதியைச் சென்ற பிப்பாய்கள் மண்டைதீவுச் சந்திக்கு அப்பால் செல்ல முடியாமல் சந்திக்கு அருகில் தற்காலிக முகாம் அமைத்து தங்கியிருக்கின்றனர்.

மேற்படி இப்பாய்கள் அங்கேயிட்டிருக்கும் போக முடியாமல் [illegible] டிப் பாவதும் – மண்டைதீவுக்குப் போக முடியாமல் மண்டைதீவுப் பாலமும் மோதலினால் தகர்க்கப்பட்டிருக்கின்றன.

தமிழர் தமது பாதுகாப்புக்கு இந்தியாவையே நம்பியுள்ளனர்

அமிர் சொல்கிறார்

சென்னை, மே 25

இலங்கைத் தமிழர் தங்கள் பாதுகாப்புக்காக இந்தியாவை மட்டுமே நம்பியுள்ளனர்.

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணித் செயலாளர் திரு. வ அமிர்தலிங்கம் சொன்னார்.

திரு. அமிர்தலிங்கம் மேலும் சொன்னதாவது:

மத்திய கிழக்கு முயற்சியில் இருந்து விலகிவிட்டோம் என்று இந்திய அறிவித்து, இருபது இலங்கையில் இராணுவ நடவடிக்கை குறைந்து இந்திய அதிகரித்து தங்களையே காட்டுகிறது.

பெரும்பான்மை நீதி மக்கள் சிறுபான்மை இனத்தை ஒடுக்கவிரும்பினாலும் மெய்ய நாடு ஒன்று பிரிய நாடு ஒன்றைப் பிடிக்க எத்தனிக்கிறது என்றும் அமைச்சர் லலித் அதுலத்முதலி

(4 ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்

26-05-1986

திங்கட்கிழமை

சுபநேரம்:–

11 53 முதல் 1.32வரை

ராகுகாலம்:–

7.22 முதல் 8 53 வரை

இவை கலுக்கும் இடையும் பொருந்தும்

நோன்பு	நேரம்
சஹர்	4.18
மஃரிப்	6.23

உலகை, இவ்வளவு காலமும் இருந்துவிட்டு இப்ப ஐ நாவுக்கு போறது ஏதோ பிரச்சினையைத் தீர்க்கவேண்டு நினைவாக வருவதோ. . .

ஒன்டு இந்தியாவை கிட்டவே மாட்டிறதுக்கு, மற்றது பிரச்சினையை இன்னும் கொஞ்சம் இழுத்துக்கிறதுக்கு . . . அவ்வளவு தான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்வையிலிருந்து

திருமலை அகதிகள்

கரவெட்டிக்கு இடம் பெயர்வு

கரவெட்டி, மே 26
வல்வெட்டித்துறையில் இருந்த திருமலையைச் சேர்ந்த அகதிகள் கரவெட்டிக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

கடந்த முன்று மாதங்களாக வல்வெட்டித்துறை பழைய பொலிஸ் குடியிருப்பில் இருந்த 300 க்கும் மேற்பட்ட திருமலையைச் சேர்ந்த அகதிகளை நேற்றைய தினம் கரவெட்டிக்கு இடம் பெயர்த்துள்ளனர்.

வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற கலவரம் காரணமாகவே அகதிகள் வெளியேறக் காரணம் ஆகும்.

இவர்களில் 16 குடும்பத்தினர் கரவெட்டி மத்தியில் உள்ள ஏரஸ் வதி வித்தியாசாலையில் தங்கியுள்ளனர். அகதிகளுக்கான உதவிகளை பொது ஸ்தாபனங்கள் வழங்கி வருகின்றன.

விறகு வெட்டப் போனவர்

எரிந்த நிலையில் சடலமாக மீட்பு

கட்டைக்காடில் சம்பவம்

நாகர்கோவில், மே 26
இலங்கையில் காட்டுப் பகுதிக்கு விறகு வெட்டச் சென்றவர் சடலமாக காட்டில் அரைகுறையாக எரிக்கப்பட்ட நிலையில் சடலமாகக் கண்டு பிடிக்கப்பட்டார்.

கடந்த புதன்கிழமை விறகு வெட்டச் சென்ற பின்னர் காணாமல்போன இரு இளைஞர்களில் ஒருவரான செம்பியன்பற்றைச் சேர்ந்த சந்தேகநபர் நடாசிலிருந்து [illegible] சடலமே கண்டு பிடிக்கப்பட்டது.

உறவினர்கள் சடலத்தை அடையாளம் காண்டனர்.

இந்தச் சடலம் கண்டெடுக்கப்பட்டதாகக் கருதப்படும் மாதா தேவாலயத்திற்கு அண்மையில் அரைகுறையாக எரிக்கப்பட்ட நிலையில் [illegible] கண்டெடுக்கப்பட்டார்.

சடலம் உறவினர்களால் முழுமையாக எரிக்கப்பட்டு பின்னர் அதனை அவர்களைக் எடுத்துச் சென்றனர்.

கணேசபுரத்தில் துணிகரக் கொள்ளை

கருத்திரபுரம் மே, 26
ஆயுதம் தாங்கிய கொள்ளை ஒன்று நல்லூரில் வீடொன்றிற்புகுந்து வீட்டுக்காரரை ஆயுத முனையில் பயமுறுத்தி சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான தங்கநகை, ரொக்கப்பணம் ஆகியவற்றைக் கொள்ளையடித்துச் சென்றது.

இந்தவன்முறைச் சம்பவம் கடந்த 23ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 8 மணியளவில் கணேசபுரத்தில் நடைபெற்றது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

சம்பவத்தன்று இரவு 8 மணிக்கு ஆயுதங்களுடன் வந்த கொள்ளைக் கொள்ளை வீட்டிலிருந்தவர்களை ஆயுத முனையில் பயமுறுத்தி வீட்டில் சாவியைக் கேட்டது.

திருமணமாகாத ஒரு சகோதரியுடன் வீட்டிலிருந்தவர்கள் வீட்டைப் பூட்டி சாவியை எடுத்துக் கொண்டு கண்டிக்குப் போய்விட்டனர் என்றும் தங்களிடம் சாவி இல்லை என்றும் வீட்டிலிருந்தவர்கள் தெரிவித்தனர்.

கொள்ளையர் வீட்டை பலாத்காரமாக உடைத்து ரொக்கப்பணம், நகை, மற்றும் பொருள்களையெடுத்துச் சென்றனர்.

அவதாரங்களில் சிறந்தது ராமகிருஷ்ணர் அவதாரம்

சித்ருபானந்தா உரை

வாழ்ப்பாணம், மே 26
அவதாரங்களில் எல்லாம் சிறந்தது ராமகிருஷ்ணர் அவதாரம் போற்றப்படுகின்றது.

மனிதனாய் பிறந்த மனிதரோடு வாழ்ந்த இறைவனைப் பிடித்து வேறுபட்ட பாதைகளிலும் இறைவனைக் கண்டு சமய சமரசம் அருளிய அவதாரமாக ராமகிருஷ்ண அவதாரம் போற்றப்படுகின்றது.

நவாலியில் டாக்டர் வொஜிராவின் இல்லத்தில் நடைபெற்ற சத்சங்கம், பூஜை என்பனவற்றில் கலந்து உரையாற்றிய திருநெல்வேலி ராமகிருஷ்ணா ஆச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமி தன்மாத்திரு சித்ருபானந்தா இப்படித் தெரிவித்தார்.

பெரும்பாலும் அவதார புருஷர்கள் அவதரித்த பொழுது ஏனைய உளிகள் இல்லையானாலேயே அவதரிக்கின்றார்கள்.

ஏனைய உண்மையான செய்யப்பட்ட உண்மையர்களையும், மனச் சாக்ஷிக்குப் பயந்து நடப்பவரையும், உண்மை பேசுபவர்களையும் இறைவன் அவர்களிடம் விரும்புகின்றான் போலும்.

ஆகவே எல்லோரும் மனச்சாட்சிக்கு விரோதம் இன்றி உண்மையாக நடக்க முற்படவேண்டும்.

அவதாரம் கிடைக்காது விடின் அருள் என்றாலும் நிச்சயமாகக் கிடைக்கும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

'அறவழி' பத்திரிகை வெளியீடு

சாவகச்சேரி மே 26
"அறவழி" மாதாந்த பத்திரிகை வெளியீட்டு விழா இம்மாதம் 31 ஆம் திகதி சங்கிலியன் மைதானத்தில் நடைபெறும்.

முதற்பிரதியை பண்டிதர் திரு செ வெலிங்கிரி வெளியிட்டுவைப்பார்.

சாவகச்சேரி ப தேச சபைத்தலைவர் திரு எல் வீ. வைத்திலிங்கம் முதலாவது பிரதியைப் பெற்றுக் கொள்வார்.

சாவகச்சேரி ஸ்ரீராமகிருஷ்ண சேவா நிலையத்தான தர்மகர்த்தா பிரம்மஸ்ரீ வரணவிநாயகர், [illegible] பிலிப், ஆகியோர் ஆசியுரை கள் வழங்குவர்.

புன்னகை அரசியின் புதிய கருத்து

ஒரு நடிகை எல்லாம் எந்தவிதமான வேடத்தையும் ஏற்றுச் செய்ய வேண்டும் அதற்கு ஒருபோதும் பின்னிற்கக் கூடாது பின்னிற்கவும் மாட்டேன்.

இதனை விடுத்து எனக்கு வேறு வேடம் தாருங்கள். எல்லாம் இதில் நடிக்க முடியாது. நான் குறிப்பிட்ட சில வேடங்களைத்தான்செய்வேன் என்ற மனப்பாங்கு வரக்கூடாது.

எனது மனத்திற்கு நெருக்கமான இவனை மனக்கும், இன்னொருவரும், இருவரும் நடிக்க முடியாது. நான் குறிப்பிட்ட சில வேடங்களை நான் விரும்பி நடிப்பேன். இதில் நான் தயங்குவதே இல்லை.

சமீபத்தில் வெளிவந்த — ஒலிவர்களின் ஏமாற்றத்தை பாராட்டு நல்கினையும் முழுமையான வரவேற்பை பெற்ற 'அவள் ஒரு கதை' படத்தில் என்னுடைய ரசிகர்கள் எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

இவ்வாறு சொல்லுவர் வேறு யாருமல்ல திரையுலகத் தாரகை யும் புன்னகை அரசியுமான நடிகை கே.ஆர். விஜயாதான்.

புன்னகை பூத்த முகத்தில் எப்போதும் வட்டமிடும் இந்த நகும் தனி நிறைவுப் புவுடன் தெத்தியில் குங்குமப் பொட்டும் வைத்து சிரித்தபடியே ஆசிர் மேலும் கூறினார்.

'ஸ்ரீராமவேந்திரர்' படத்தில் வினை மீட்டும் விநாயகராக மேற்கிளம்பவுள்ள என் நெஞ்சுக்கு நிறைவைத் தரும் விஷயங்களில் ஒன்று

இந்தவிட வருடங்களாக நான் நடித்திருந்தால் எனக்குச் சலிப்போ, சலிப்போ ஏற்பட்டதேயில்லை. 'சரஸ்வதி சபதம்' படத்தில் நான் நடித்த கதாபாத்திரம் எனக்கு மன நிறைவையும் நிம்மதியையும் தருகின்றது.

புன்னகை அரசியின் நியாயமான புகழுக்குக் காரணம் நடுப்பிடிக்கு அவர் கொண்ட ஒருமித்த பக்திதானோ!



அக்கராயன்

அரசினர் ஆஸ்பத்திரி

நோயாளருக்கு உணவு இல்லை

கிளிநொச்சி மே 26
கிளிநொச்சி அக்கராயன் அரசினர் வைத்திய சாலையில் தங்கியிருந்த சிங்கள நோயாளர்களுக்கு கடந்த ஒருமாத காலமாக உணவு வழங்கப்படவில்லை.

இதனால் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர், உணவு தயாரிக்கப்பட்டதற்கு பணப் பிரச்சினையே காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இவ்வைத்தியசாலையில் தங்கியிருந்த சிங்கள நோயாளர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

ஒப்பந்த அடிப்படையில் இதுவரை இவ்வைத்தியசாலையில் உணவு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

குருபூசை

பருத்தித்துறை மே.26
பருத்தித்துறை மேலைப் புலோலி வசாவிளான் வித்தியாராலையில் வித்தியாலய அதிபர் திரு நாகேஸ்வரநாதனால் தலைமையில் நிர்வாகத்தினரால் நாளை குருபூசை நடைபெற்றது.

மன்னாரில் கிராமத் தொண்டருக்கு முதலுதவிப் பயிற்சி

வாழ்ப்பாணம், மே.26
மன்னார் தமிழ் தமிழ்ப்பு மறுவாழ்வுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் ஜூன் 14 ஆம் திகதி மன்னார் நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதனிடையே சங்கத்தின் வைத்தியக்குழு, கிராமத் தொண்டர்களுக்கு முதலுதவிப் பயிற்சி அளித்துள்ளது.

கிராமங்களில் மக்கள் ஒன்றுகூடும் இடங்களான தேவாலயம், பாடசாலை, மருதி, கிராமமுன்னேற்றச் சங்கம் போன்ற இடங்களில் வைப்பதற்காக 28 கிராமங்களுக்கு முதலுதவிப் பெட்டிகள் வழங்கப்பட்டன

முதலுதவிப் பெட்டிகளை மன்னார் அரச அதிபர், மன்னார் ஆயர் ஆகியோர் வழங்கினர்.

அரசியல் அதிகாரம் எல்லாரிடமும் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்பதே எமது கருத்து.

'ஆழியவளையிலும் குண்டு வீச்சு!

நாகர்கோவில், மே 26
கடந்த வியாழக்கிழமை குமரிமுனையில் பொலிஸார் விசாரணைக் குண்டுகளை வீசியதில் நத்தையோ எண்பவர் காயமடைந்தார்.

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

உணவுமுத்திரை வேலைகள் கிளிநொச்சியில் பூர்த்தி

அடையும் நிலையில்

கிளிநொச்சி, மே 26
கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கிளிநொச்சி, பூநகரி, மன உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் சுமார் 26 ஆயிரம் குடும்பங்களுக்கு உணவு முத்திரைகளான 'ஆ' படிவம் விநியோகிக்கப்பட்டன.

குறிக்கப்பட்ட நிலையில் உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களில் இவை கையளிக்கப்பட்டுள்ளன.

பல்வேறு கிராமத்தில்

இணைப்புக்குழு கூட்டம் 28ஆம் திகதி

நல்லூர் மே 26
28 ஆம் திகதி நடைபெற இருந்த அரசாங்க சேவை தொழிற்சங்க இணைப்புக்குழுவின் கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமையன்று நல்லூர் கலாசார மண்டபத்தில் காலை 8மணிக்கு நடைபெறும்

வாழ் மாவட்டத்தில் இருந்து வரும் வாரவிறுப்பற்ற சூழ்நிலையில் அரசாங்க ஊழியர்களுக்கு ஏற்படக்கூடிய இடையூறுகள் குறித்த கூட்டத்தில் ஆராயப்படும்.

எதிர் காலத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் இந்த ஆராயப்படும்.

வாழ் மாவட்டத்தில் கடமை புரியும் அரசாங்க ஊழியர்களும் அரசாங்க தொழிற்சங்க நிர்வாகிகளும் கூட்டத்தில் பங்குபற்றும்படி வேண்டப்படுகின்றனர்.

Science Centre
KARAVEDDY
பகல் நேர வகுப்பு
O/L 86
ஆரம்பம்: 27-05-86

முஸ்லிம்களுக்கு மாதிரிக் கிராமம்

கல்முனை, மே.26
அம்பாறை மாவட்டத்தில் [illegible] மாதிரிக் கிராமத்தில் வசிக்கும் முஸ்லிம் மக்களுக்கு மாதிரிக் கிராமம் ஒன்று அமைக்கப்பட்டு.

அதில் இவர்கள் முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் நிழற்குடையான அமைப்பாளர் ஜனாப். எம். ஐ உதுமா லெப்பை, அம்பாறை எம் பியும், அம்பாறை மாவட்ட அமைச்சருமான பொருள் உதவி அமைச்சருமான திரு பி தயாரத்தினையை [illegible] வரும் [illegible] வேட்டுள்ளார்.

மக்கள் முகம்

புலோலி சனசமூக நிர்வாகிகள்

பருத்தித்துறை மே 26
புலோலி வடமேற்கு சனசமூகநிலைய சமாச நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டோர் விபரம்.

திரு. பா. இராஜநாதன் தலைவர், திரு. [illegible] வடிவேலு செயலாளர் திரு [illegible], துணைச் செயலாளர்:- திரு. கே. சந்திரகாந்தன், பொருளாளர்:-திரு வி. [illegible] செல்வராசா

நான்கு கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

ச. ச- நிலைய நிர்வாகிகள்

[illegible] அம்பகாமம் சனசமூக நிலைய [illegible] வருட உதிரியாகத் தெரிவானவர்கள்:-

தலைவர் வி நாகேஸ்வரன், உபதலைவர் [illegible] சற்குணநாதன் செயலாளர் கா. உதயகுமார், உப செயலாளர் சி [illegible] பொருளாளர் விநாயகமூர்த்தி. [illegible] சமாதானக் [illegible] நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

ஊடுவில் பகுதியில் இன்று முதல் விசர் நாய் தடுப்பு ஊசி

நாவிப்பாலம், மே 26
ஊடுவில் கிழக்கு அதுவரை அறிவிக்கப்பட்ட உதிரி யோகதர் திரு இ. [illegible] பிள்ளையான் பிள்ளைகளுக்கு [illegible] இடங்களில் விசர் நாய் தடுப்பூசி போடப்படும் என அறிவித்தனர்.

மே 26 ஆம் திகதி

மல்லாகம் ஆரம்ப சுகாதார நிலையம் புதுமடம் [illegible] சந்தியில் பாடசாலை, ஊடுவில் கிழக்கு அண்ணாவிலை சாலை, வாழ் அறிவிருத்தி நிலையம் ஊடுவில் கிழக்கு நிலையம்.

மே 27 ஆம் திகதி

ஆரம்ப சுகாதார நிலையம், இளந்தாரி [illegible] லடி, இணுவில் காலை [illegible] வாசிகசாலை, இணுவில் மேற்கு வாசிகசாலை, இணுவில் கிழக்கு வாசிகசாலை, இணுவில் மேற்கு [illegible] சாலை, இணுவில்.

மே 28 ஆம் திகதி

சுதுமலை சனசமூக நிலையம் — தாவடி தெற்கு. [illegible] சனசமூக நிலையம் — தாவடி தெற்கு [illegible] கிழக்கு பிரசவ [illegible] — தாவடி வடக்கு. [illegible] சனசமூக நிலையம் — தாவடி தெற்கு

கிராம மக்கள் மத்தியில்

கட்டுப்பாடு வளர சனசமூக நிலையங்களின் ஒன்றியம் அவசியம்

கரவெட்டி மே 26
கிராம மக்கள் மத்தியில் கட்டுக்கோப்பையும் ஒழுங்கையும் பயன்படுத்துவதற்கு சனசமூக நிலையங்களின் ஒன்றியம் அவசியமானது.

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு எ. இராமச்சந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

தெல்லிப்பழை, சன சமூக நிலைய மண்டபத்தில் தெல்லிப்பழைக் குட்பட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியத்தை ஏற்படுத்தும் ஆரம்ப நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட

உதய சங்கற்பம்

சமயம் -ஆதிமிக சமரசத்தைப் பெறுகின்றது என்பதை ஒவ்வொருவரும் வாழ்த்தவேட்ட வேண்டும்.

— சுவாமி விவேகானந்தர்

இதயன்

திங்கள், 26 மே மாதம் — தொலைபேசி 24805, 22073

யாழ்ப்பாணம். 26 05 86

மண்ணைக் காப்போம்

யாழ்ப்பாண மாவட்டத்தின் மண்வளம் சேதமுறும் ஆபத்து உண்டாகி வருகிறது. இது குறித்து மாவட்டப் பிரதி விவசாயப் பணிப்பாளர் திரு ச. கிருஷ்ணபிள்ளை எச்சரிக்கை செய்திருக்கிறார்.

பசளை பற்றாக்குறையாலேயே இந்த ஆபத்து உருவாகி வருவதாகவும் அவர் எடுத்துரைத்திருக்கிறார்.

வெளிமாவட்டங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட பசளையின் தொகை குறைந்து விட்டது அதனால் தடுக்க அளவில் யாழ்ப்பாண மாவட்டத்தில் கிடைக்கும் பசளையைப் பாவிக்க வேண்டும் இவ்வாறு திரு கிருஷ்ணபிள்ளை அறிவுறுத்தி உள்ளார்

திரு கிருஷ்ணபிள்ளையின் முன்னெச்சரிக்கை எமது மண்ணில் அக்கறை உள்ள சகலராலும் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

யாழ்ப்பாணம் சிற்றாறு தானும் இல்லாத வரண்ட பிரதேசம் எவ்வளவு மக்களின் பெரும் பாலானவர்கள் விவசாயிகள்.

விவசாயத்தின் இரு கண்கள் நிலவளமும் நீர்வளமும் ஆகும். நீர்வளம் குன்றிய எமது பிரதேசத்தில் நில வளத்தையாவது நாம் உரிய முறையில் பாதுகாக்க வேண்டும். நிலவளம் நிறைந்திருந்தால் தான் கிடைக்கும் குறைந்த பட்ச நீர்வளத்தைப் பயன்படுத்தியாவது உணவுப் பொருள்களையேனும் விளைவிக்க முடியும்.

இதுவரை காலமும் நீர்வளம் நாளை யாழ்ப்பாண மாவட்டத்தின் முதலாம் இலக்க விவசாய பிரச்சினையாக இருந்து வந்தது. எமது முன்னோர்கள் பழைய — பாரம்பரிய முறைகளைக் கடைப்பிடித்து எமது நில வளத்தைச் சற்றும் தளராது பாதுகாத்து வந்தார்கள்

இயற்கைப் பசளைகளை காலம்தப்பாது, கிராமத் தலைவரது பூமித்தாய்க்கு உணவாக அளித்து வந்தார்கள். எமக்கு உணவு தரும் அன்னை பூமிக்கு, அவள் நலம் குன்றாமலி, வளம் குறையாமலி பேரூக்குள்ள உணவு வகைகளை — பசளை — இயற்கைப் பசளைக் கொடுத்து வந்தார்கள். அதனால் தான் எமது பூமித் தாயின் உடற் பலம் குறையாமல் அன்னை எமக்குப் பயன் தந்து கொண்டிருக்கிறாள்

எமது வருங்கால சந்ததியினரும் பூமித் தாயின் இதனால் பயன் பெற வேண்டும். அவர்களும் வயிறார உண்ண வேண்டும். அவர்கள் தாயகத்தின் மண் வளம் பாதிக்கப்பட்டால், இளைஞர்களின் இப்போதைய நியாயம் பயனற்றதாகிவிடும். அரசியல் சுதந்திரம் கிடைத்தும் பொருளாதார பலமற்ற — பிறர் கையை நாடும் ஒரு சமுதாயம் உருவாகிவிடும். அது வேண்டாம் வேண்டவே வேண்டாம்

நமது உணவைத் தாமே விளைவிக்கக் கூடிய வருங்கால சமுதாயம் உருவாக வேண்டும். அதற்கு ஏற்றாற் போல் தாயகத்தின் நில வளமும் நீர்வளமும் பேணப்படுவது அவசியம்.

விவசாயமே எமது வருங்கால சந்ததியின் மூலாதார பொருளாதாரமாக இருக்க வேண்டுமாயின், தாயகத்தின் வளங்கள் தக்க படி பேணப்படுவதும் வளர்க்கப்படுவதும் இன்றியமையாதவை.

எனவே மண் வளம் சேதமுறாமல் ஆபத்து தவிர்க்கப்பட வேண்டும். உள்ளூரில் கிடைக்கும் இயற்கைப் பசளைகளை பூமித் தாய்க்கு உரிய காலங்களில் உணவாக அளிக்க வேண்டும் அந்தப் பணியில் விவசாயிகளுக்கு மாடுகன்றி முழு மக்களுக்குமே பெரும் பொறுப்புண்டு.

நமது பிள்ளைகளின் நலனில் அக்கறை உள்ள பெற்றோர் யாவரும் மண்வளம் பேணுவதில் அக்கறை காட்ட வேண்டும்.

தாயகம் பேண, அதன் வளம் பேண, மக்கள் நலம் காண மண்ணைக் காப்போம்!

வீமன்காமம் வித்தியாலயம்

உயர் தர வகுப்பு மீண்டும் நடத்த கோரிக்கை

காங்கேசன்துறை, மே26 வீமன்காமம் மகா வித்தியாலயத்தில் உயர் தரவகுப்பு மீண்டும் நடத்தப்பட வேண்டும்.

இப்படியான கோரிக்கை ஒன்றை மாவை வளர்கள் கழகத் தலைவர் திரு ஏ. வி சர்மா விடுத்தார்.

மேற்படி வித்தியாலயத்தில் நடந்த வைபவம் ஒன்றில் வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு. சூர். சத்தாசிவம் கலந்து கொண்டபோது இக்கோரிக்கை விடுக்கப்பட்டது

இக்கு உயர் வகுப்பு மாணவர்கள் கூடமற்றும் பாடசாலைகளில் அனுமதி பெறுவதில் கஷ்டம் அடைகிறார்கள்.

ஆகவே உயர்தர வகுப்பை நடத்த அனுமதி வழங்க வேண்டும் என்றார்.

கல்விப்பணிப்பாளர் நடவடிக்கை எடுப்பதாக கூறினார்.

★ மடகஸ்காரில்

விமானவிபத்து!

பாதுகாப்பு மந்திரி பலி!!

2 ஜெனரல் உட்பட 15 பேர் உயிரிழப்பு

லண்டன், மே.25

கோர விமான விபத்து ஒன்றில் மடகஸ்கார் நாட்டின் பாதுகாப்பு மந்திரி பலியானார்

அவருடன் விமானத்தில் பயணம் செய்த இரண்டு இராணுவ ஜெனரல்கள் உட்பட 15 பேர் இந்த விபத்தில் உயிரிழந்தனர்

கடந்த செவ்வாய்கிழமை இந்த விமான விபத்து நிகழ்ந்தது.

இந்த சமுத்திரத்தில் அமைந்திருக்கும் ஒரு தீவு மடகஸ்கார்.

"மடகஸ்கார் இராணுவ அகாடமி"யில் நடைபெற்ற இராணுவ நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்காக பாதுகாப்பு மந்திரி சிமோன்சையும் மற்றும் 14 பேரும் சென்ற விமானமே விபத்துக்குள்ளானது.

'டிஎல் 3' ரகத்தைச் சேர்ந்த இந்த விமானம் தலைநகருக்கு 170 கிலோமீற்றர் தெற்கே மலைப் பிராந்தியத்தில் விபத்துக்குள்ளானது.

விபத்துக்கான காரணம் அறிய அந்தரத்தாலும் வெளியிடப்படவில்லை

பிராந்திய அமைதி குறித்து

மத்திய அமெரிக்க நாட்டுத் தலைவர்கள் ஒன்று கூடி ஆராய்வு

கௌதமாலா, மே 25

தமது பிராந்தியத்தில் நிலவும் பதற்ற நிலையைத் தணிப்பது குறித்து மத்திய அமெரிக்காவின் ஐந்து நாட்டுத்தலைவர்கள் கூடி ஆராய்ந்தனர்

கௌதமாலா, ஹொண்டுராஸ், எல் சல்வடோர், நிக்கரகுவா, கொஸ்டாரிக்கா ஆகிய நாடுகளின் தலைவர்களே கௌதமாலாவில் கூடி இதனைக் ஆராய்ந்தனர்

தமது பிராந்தியத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்கு ஒரு பொது அமைப்பு ஒன்றை உருவாக்குவது பற்றியும் — சீர்குலைந்திருக்கும் வர்த்தக பொருளாதார ஒத்துழைப்புக்களை சீரமைப்பது பற்றியும் அவர்கள் ஆராய்ந்தனர்.

வெளி உலகில்

வளைகுடாப் போரில் சிக்கி

எண்ணெய்க்கப்பல் முற்றுக சேதம்

லண்டன், மே. 25

ஈரானுக்கும் ஈராக்குக்கும் இடையிலான வளைகுடாப் போரில் ஏவுகணைத் தாக்குதலுக்கு இலக்காகி பாரிய எண்ணெய்க் கப்பல் ஒன்று முற்றாகச் சேதமடைந்தது

நோர்வே நாட்டு நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான 'டபிள்யூ என் பிரைசல்' என்ற 170 ஆயிரம் தொன் நிறையுடைய எண்ணெய்க் கப்பலே சேதமுற்றது

இரண்டு வருட காலமாக நடைபெறும் மிகப்பெரிய எண்ணெய்க் கப்பல் இதுவென்று கூறப்படுகிறது.

எண்ணை குதங்கள் மீது தாக்குதல்

லண்டன் மே.25

ஈரானின் தென்மேற்கு எல்லையில் உள்ள ஃபாரன்டு எண்ணை நிரப்பு நிலையங்களை தனது விமானங்கள் குண்டு வீசித் தாக்கி சேதப்படுத்தியிருப்பதாக ஈராக்கின் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது

கூட்டம் குழம்பியது

ஜோகன்னஸ்பேர்க் மே.25

தென்னாபிரிக்காவில் ஆளும் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் ஒருவர் பேச இருந்த கூட்டம் ஒன்றை வெள்ளை இனத்தைச் சேர்ந்த நூறுவரிடங் குழப்பினர்.

பயங்கரவாதத்தை ஒழிப்பது பற்றி இஸ்ரவேல் பிரதமருடன் பேசுவாராம் பிரிட்டிஷ் பிரதமர் அறிவிப்பு

லண்டன், மே 25

மத்திய கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்தும் பொருட்டு இஸ்ரவேல் பிரதமருடன் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டுவது குறித்து—

இஸ்ரவேல் பிரதமர் ஷிமொன் பெரேஸுடன் நாம் பேச்சு வார்த்தை நடத்தப் போவதாக பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரட் தட்சர் தெரிவித்தார்.

இஸ்ரவேலுக்கு விஜயம் செய்திருக்கும் பிரிட்டிஷ் பிரதமர் திருமதி. தட்சர் டெல்அவிவ் விமான நிலையத்தில்வைத்து இதனைத் தெரிவித்தார்.

யூத மக்களுக்கு எனக் 88 வருடங்களுக்கு முன்னர் ஒரு நாடு-இஸ்ரவேல் - உருவாக்கப்பட்டபின்னர் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் தலைவர் ஒருவர் அங்கு விஜயம் செய்வது இதுவே முதல் தடவையாகும்.

அரபு நாடுகளுக்கும் இஸ்ரவேலுக்கும் இடையில் ஒர் இணக்கத்தை உருவாக்குவது குறித்தும்—

அதன் மூலம் மத்திய கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்துவது பற்றியும் இஸ்ரவேல் பிரதமருடன் தான் பேசப்போவதாக திருமதி தட்சர் கூறினார்

"மத்திய கிழக்கு சமாதானம் குறித்து பேசுவதுடன் நிலத்தை விட்டுக் கொடுப்பதும் நீங்கள் தவாரகக் கொண்டு எந்திருக்கிறீர்களா!"—என வினவப்பட்ட போது 'இல்லை' என திருமதி தட்சர் பதிலளித்தார்

சர்வதேச பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டுவதற்கு திருமதி தட்சர் எடுத்தவரும் முயற்சி உலகநாடுகளுக்கு பிரமாணமான ஒரு முன்னுதாரணம் என இஸ்ரவேல் பிரதமர் கூறினார்.

வானொலியில் இசை வகுப்பு

சென்னை, மே 25

சென்னை வானொலி நிலையம் கலைஞர்களை ஒன்றிணைக்கும் ஒரு பிரதான தொடர்பு சாதனமாக மக்களிடையே மதிப்பு வகுப்பு நடத்தப் படுகிறது.

அதில் இன்னாள் திருமுறை மத்தளக்கலைஞர் பேராசிரியர் ஏற்று இசையிசை வகுப்பு நடத்தப்படுகிறது.

கலைமாமணி தர்மபுரம் பி. சுவாமிநாதன் ஆசிரியராக இருந்து பயிற்சி வகுப்பை நடத்துகிறார். திருமதி சரஸ்வதி சங்கர நாராயணன் மாணவி யாகப் பயிலுகிறார்.

ஆயிப்பிராய வாக்கெடுப்பு: கன்சர்வேட்டிவ் கடைசி இடம்

லண்டன், மே 26

லண்டன் டெய்லி டெலிகிராப் நாளிதழ் நடாத்திய ஆயிப்பிராய வாக்கெடுப்பில் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சி கடைசி இடத்தைப் பெற்றது.

அடுத்த தேர்தலில் ஆளும்கட்சி தெரு வாக்கு விழுப்போம் என்று 27.5 சதவீதமானோரே தெரிவித்தனர்

37 சதவீதமானோர் தொழிற்கட்சிக்கும் 31.5 சதவீதமானோர் சமூக ஜனநாயக—லிபரல் அணிக்கும் வாக்கு விழுப்போவதாகக் கூறினார்கள்.

1983ஜூனில் நடைபெறவுள்ள தேர்தலில் தொழிற் கட்சியே ஆட்சி அமைக்கும் என்று 49 சதவீதமானோர் தெரிவித்தனர்

கேரளத்தில் நெருக்கடி தணிந்தது

புதுடில்லி, மே, 25

கேரள அமைச்சரவையில் ஏற்பட்ட நெருக்கடி தணிந்தது.

அமைச்சரவையிருந்த வெளியேற்றப்பட்ட கேரள காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஆர். பாலகிருஷ்ணபிள்ளைக்கு மீண்டும் மின்சாரத்துறை அமைச்சர் பதவி வழங்கப்பட்டதை அடுத்து நிலைமை சமூகமடைந்தது

வங்கி இடம் மாறுவதற்கு வல்வையில் எதிர்ப்பு

வல்வெட்டி, மே 26,

வல்வெட்டித்துறை மக்கள் வங்கி கிளையை உடுப்பிட்டி ம.தொ.க. சங்கக் கட்டடத்திற்கு இடம் மாற்ற எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு வல்வெட்டித்துறையில் பெரும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுவருகிறது.

கிழ நினைவுகளுக்கு முன் வல்வெட்டித்துறை மக்கள் வங்கி கிளைக் கட்டடம் மீது நடத்தப்பட்ட விமானத் தாக்குதலினால் கட்டடம் சேதமாக்கப்பட்டது.

இதனால் உடுப்பிட்டி ம.தொ.க சங்கக் கட்டடத்துக்கு இதனை இடம்மாற்ற ஏற்பாடு செய்யப்பட்டது

கடந்த வெள்ளிக்கிழமை உடுப்பிட்டி ம.தொ.க சங்கக் கட்டடத்திற்கு மக்கள் வங்கித் தளபாடம் ஏற்றிவரப்பட்டது.

எனினும் முதிய தலைமுறையினர் ஏற்றவந்த லொறி வெறுமனே திருப்பப்பட்டது.

ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில்

பல தமிழ் நிகழ்ச்சிகள் நிறுத்தப்படுகின்றன

நல்லூர், மே 25

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தால் தினமும் ஒலிபரப்பப்பட்டு வந்த பிறமாநாட்டு நிகழ்ச்சிகள் மறு அறிவித்தல் வரும்வரை நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுவருகிறது

அண்மையில் கொழும்பில் உள்ள அரச கனியார் நிலையங்களில் கடமையாற்றிய தமிழ் ஊழியர்கள் கட்டாய லீவில் அனுப்பப்பட்டனர். அந்த வரிசையில் ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் பணிபுரிந்த சில தமிழ் உத்தியோகத்தர்களும் கட்டாய லீவில் உள்ளனர்.

அதனால் ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தினால் ஒலிபரப்பப்பட்டு வந்த சில தமிழ் நிகழ்ச்சிகள் நிறுத்தப்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் உள்ள அனுபவம் வாய்ந்த தமிழ் அறிவிப்பாளர்கள் கட்டாய லீவில் அனுப்பப்பட்டதையடுத்து பல புதிய முகங்கள் அறிவிப்பாளர்கள் அறிமுகப்படுத்தப்பட்டுவருகிறார்கள்.

நபால் ஊழியருக்கு புது அனுபவம்

சாவகச்சேரி, மே 26

சாவகச்சேரித் தபாற் கந்தோரில் இருந்த தபால் சேவிக்கச் சென்றும் ஊழியர் ஒருவருக்கு புதிய அனுபவம் ஒன்று [illegible] தபால் பெட்டியைத் திறந்த போது பாம்பு ஒன்று படம் எடுத்தது.

பயந்தபடி கட்டடம் சென்ற போது பாம்பு [illegible] மறைந்து [illegible] ஒரு மணித்தியாலத்தின் பின்னரே [illegible] கொண்டு [illegible] 25 [illegible]

புனித பிலிப் நேரியார் வருடாந்த உற்சவம் இன்று

புனித பிலிப்நேரியாரின் வருடாந்த மகோற்சவம் கத்தோலிக்க திருச்சபையால் ஆண்டுதோறும் வைகாசி மாதம் 26 ஆம் திகதி கொண்டாடப்பட்டு வருகின்றது

நியான பிரசங்கியார் சபை, பரிசுத்த பரமதிருத்துவத்தின்சபை, பரம திருத்துவத்தின் வைத்தியரான ஆயிலைவாளின் ஸ்தாபகர் பிலிப்நேரி

திருத்தேரும் இறைவரைக்கும் ஆழியாத புனித வரம் பெற்றவர் இவர்.

கத்தோலிக்க திருச்சபையின் மாபெரும் சேத்தி பெற்ற புனிதர்.

இப்புனிதரின் பிரசங்கியார் சபையைச்சேர்ந்த அதிவணக்கத்துக்குரிய பேரசேவ்வால்லுவிவர், யாக்கோபமே கொன்சால்வெஸ் அடிகள் ஆகியோரே இலங்கையில் முதன் முதல் கத்தோலிக்க சமயத்தை பரப்பினவர்கள்.

1533 ஆம்ஆண்டுமாதம் 18 வயதில் செல்வச் செழிப்பு மிக்க ஒடுப்பத்தை விட்டு தேவ தொண்டு செய்ய ஆரம்பித்தவர் புனித பிலிப் நேரி

சாதாரணமாக ஒரு நாளுக்கு ஒரு முறை மட்டுமே உணவு கொள்வார் எளிய வாழ்வைக் கைக்கொண்டார்.

பத்து வருடங்கள் ஏழைகளின் உள்ள சவக்காலையில் இரவுகளை கழித்தார் பின்னர் நகரத்திற் சென்றிட்டார்.

1544 ஆம் ஆண்டு தான ஆலயவளவில் ஏழைகளுக்கு உணவு வழங்கினார் பின்னர் ஆலயத்தில் ஆராதனை செய்தார்.

1548 ஆம் ஆண்டு மரித்த பரமதிரித்துவத்தின் சபையை ஆரம்பித்தார்.

1550 ஆண்டுபரிசுத்த பரமதிரித்துவத்தின் நாமம் கொண்ட வைத்தியசாலையை ஆரம்பித்தார்.

1551 ம் ஆண்டு பரிசுத்த குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

இவரது பூசைப்பலி முடிய இரண்டு மணித்தியாலங்கள் எடுக்கும். அவ்வேளையில் பாவச் அதன் பெற்று பீடமும் படிஞரும் நடைபெறும்.

1551 ஆம் ஆண்டு தியானப் பிரசங்கியார் சபையை ஸ்தாபித்தார்

1583 ஆம் ஆண்டு மார்ச் 16 திகதி பவுலோமை மரித்தபின் உயிர்ப்பித்தார்.

அதிகமான அற்புதங்களைப் பெற்ற பரிசுத்த சங்கிமசியோர் காட்சியில் கண்டார்.

தாம் மரணிக்கும் நேரத்தையும் காலத்தையும் மனிதர்களுக்கு ஏனவே அறிவித்திருந்தார்.

மரித்தபின் ஆராதனை திருத்தேரும் இருந்த இடத்தை தொண்டக் குஷ்ட நோயாளி குணமடைந்தார்.

மரித்து 391 வருடங்களின் பின் இன்னும் இவரின் சடலம் கழிவாகாமல் இருக்கிறது.

இப்புனிதரின் பிரசித்த ஆலயங்கள் கொழும்பு, புறக்கோட்டை, கொச்சிக்கடை, நீர்கொழும்பு, தம்மிற்ற தாழையடி—செம்பியன்பற்று, மந்தாவத்தை- இளவாலை, ஆனைப்பிட்டி, மாரிமுத்தா, முருகன், ஆற்றுக்குழி- நாவாந்துறை, தொட்டகேனி- மன்னார் ஆகிய இடங்களில் அமைந்திருக்கின்றன

வருடாந்த மகோற்சவம்

நல்லூர், மே 26

கண்டி, ஸ்ரீவிரசாவி தம்மன் தேவஸ்தான மகோற்சவம் எதிர்வரும் 28ந் திகதி புதன் கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது

தொடர்ந்து 25 நாள் கண் உற்சவம் நடைபெறும்

10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் 11 ந் திகதி சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும்

திருவிழா நாட்களில் தினமும் காலை 10 மணிக்கும் 6 மணிக்கும் வசந்த மண்டபம் பூசைகள் நடைபெறும்.

சமய செய்திகளில்

அகண்டநாம பிரார்த்தனை

காங்கேசன்துறை மே 26

கந்தர் உயிரார்த்தம் என எதிர்வரும் எமக்காகப் பொராடி வரும் இளைஞர்களுக்கும், பொதுமக்களுக்கும் வாதுகாப்பும், பலமும் வேண்டி அகண்டநாம பிரார்த்தனை மாவிட்டபுரத்தில் நடைபெற்றது.

மாவிட்டபுரம் மந்திர மடி கோவில் ஆலயம் தேவஸ்தானத்தில் நடந்த இப் பிரார்த்தனையில் ஆலயபாலகே தமயில் வாசனம் திமர்நாரண விசாரணை அதிகாரி திரு எஸ் தம்பிராசா ஆகியோர் முக்கிய பங்கேற்றனர்.

யோக்கு வரத்து பரதிப்பு

தாவடி மே 26,

தாவடியும் வருகிக்கான யோக்கு வரத்து வரிக்கப்பட்டிருக்கிறது.

வருகிறவேளிப் பயணம் கூட்டக்கப்பட்டதினால் யோக்கு வரத்துத் நடைபெறவில்லை.

இதனால் தாவடி, ஆழியவளை, கரந்தறை, கட்டைக்காடு பகுதி மக்கள் கண்டி பிரதான விதிக்கூடாக யோக்கு வரத்து செய்ய முடியாத நிலையில் உள்ளனர்.

சுதந்திரன்

சொல்லாதிமாரி

குறள்:

ஒழுக்கமாருக் கொல்ல ஒருவன்தன் நெஞ்சுந்து
அழுக்காறு இலாத இயல்பு.

பொருள்:

ஒருவன் தன் நெஞ்சில் பொறாமை இல்லாமல் வாழும் இயல்பைத் தனக்கு உரிய ஒழுக்கநெறியாகக் கொண்டு பேணுதல்வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்த நாள்—திருமண வைபவங்கள் பூப்புனித நீராட்டு விழா—புதுமனை புகுவிழா போன்ற மங்கள வைபவங்களைச் சிறப்பாக ஒளிப்பதிவு செய்துகொள்ள

வீடியோ விஷன்
218, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்
T'Phone: 22477

உதயன்

26-05-1986 திங்கட்கிழமை

தமிழ், இந்தி, ஆங்கிலம் ஒரிஜினல் வீடியோ பிரதிகளை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள

வீடியோ விஷன்
213, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T'Phone: 22477

பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ்

2 ஆயிரம் சிங்களவர் கைது!

கொழும்பு, மே 26

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் இதுவரையிலும் தென்னிலங்கையில் பல்வேறு இடங்களிலிருந்து 2 ஆயிரம் சிங்களவர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

இதுவரை சுமார் 2 ஆயிரம் சிங்களவர்கள் வரை கைதாகி விளக்கறியில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பல சிங்களப் பிரமுகர்களும் அடங்குகின்றனர்.

உறவினர்கள் சந்தேக நபர்களைச் சென்று பார்க்க முடியாத நிலையில் உள்ளனர்.

சந்தேக நபர்களைச் சந்திக்க ஏற்பாடுகள் செய்யும்படி கோரி உறவினர்கள் அரசைக் வரிக்கின்றனர் என்று அறிய வருகிறது.

அரிசி, சீனி நீரில்

வேலணை, மே 26

யாழ்ப்பாணத்திலிருந்து அராலித்துறை வழியாக படகு மூலம் புங்குடுதீவுக்கு எடுத்துச் செல்லப்பட்ட 2 மூடை சீனியும், 10 மூடை அரிசியும் படகு கவிழ்ந்ததால் நீரில் நனைந்து நாசமாகியது.

விலைப்பட்டியல் ஒன்றும் நீரில் வீழ்ந்தது.

வர்த்தகர் ஒருவர் எடுத்துச் சென்ற சீனிமூடைகள் நீரில் வீழ்ந்த பின்னர் சாக்கு வட்டுமே நீரிலிருந்து மீட்கப்பட்டது.

இளைஞர் மரணம்

மட்டக்களப்பு, மே 26

மட்டக்களப்பு பெரிய கல்லாறில் ஆயுதப்படையினரால் கண்டு ஓடமுயன்ற இளைஞர் ஒருவர் சுளிக்கிழமை மாலை சுட்டுக் கொல்லப்பட்டார்.

சங்ஞர்க்கேடு. இராணுவமுகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்ட இவரது சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் பிரேத பரிசோதனையின் பின்னர் ஆயுதப்படையினரால் அடக்கம் செய்யப்பட்டது.

இலங்கை..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வினவினார்.

தமிழர் தரப்பிலிருந்து மேலும் பிரச்சினைகள் கோரப்படுமாக் என்ற வினாவுக்கு பட்சாதி லேயே இலங்கை தனது கோரிக்கைகளை விளக்கியுள்ளது. இந்தியாவுக்கு சமர்ப்பிக்கும் எந்தவொரு இலங்கை, இந்தியாவுக்கு தெரியப்படுத்தியுள்ளதாம்.

தமிழர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூறியிருக்கிறார்.

இந்தப் பேச்சில் இருந்து ஒன்று தெளிவாகப் புரிகிறது. இனப் பிரச்சினைக்கு பேச்சு மூலம் அரசியல் தீர்வு காணுவதில் அக்கறையாக இருப்பதாக நிரூ. ஜெயவர்த்தனா கூறிக்கொள்வது, கொழும்பாக எண்ணு தெரிகிறது.

இலங்கை, இப் பிரச்சினையை ஐ நாவுக்குக் கொண்டு போவதாகக் கூறுவது சர்வதேச ரீதியில் இந்தியாவுக்கு அவதூறு ஏற்படுத்தும் முயற்சி என்பது தெரிகிறது

இப்படி நிரூ. ஆயிர விக்கிரம் சொன்னார்.

தேசத்துரோகிகள் பற்றி ஈ.பி.ஆர்.எல்.எப். விடுத்த அறிக்கை

நல்லூர் மே. 26

கடந்த வெள்ளியன்று நவாலியில் மக்கள் விடுதலைப் படையினரால் மரணதண்டனை விதிக்கப்பட்டவர் திருக்கோவிலைச் சேர்ந்த ஜோசப் பயசன் என்றே தெரிவிக்கப்படுகின்றது

இது தொடர்பாக சமூக மக்கள் புரட்சியை விடுதலை முன்னணி அறிக்கை வெளியிடுகையில் கூறியுள்ளது.

அதன் விபரம் வருமாறு:-

பல்வேறு நிலைகளில் இழப்புக்கள் மத்தியில் சமாவிடுதலைப் போராட்டம் முன்னேறி வருகின்றது

பல்வேறு வழிகளில் சமூகப்போராளிகள் பற்றிய விவரங்கள் அறிய எம் சமூகத்தை நடத்தச் செய்திகளை சேகரிக்கவும் சிறீலங்கா அரசின் வைக்கிகளை மக்கள் மத்தியில் வெளியிடுகின்றனர்.

இந்தத் தேசத் துரோகிகளை மன்னிக்க முடியாது இவர்களை மன்னிப்பது என்பது பலநூறு போராளிகளின் இழப்பை உருவாக்கியிருக்கும்.

இவர்களைப் பற்றி எச் சரிக்கையாக இருக்கும்படி மக்களைக்கேட்டுக் கொள்கிறோம்.

கடந்த 23 ஆம் திகதி திருகோணமலைச் சேர்ந்த ஜோசப் பயன் என்ற தேசத்துரோகிக்கு எமது மக்கள் விடுதலைப் படையால் நவாலியில் வைத்து மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

ஜோசப் பயன் என்ற இந்த தேசத்துரோகி திருமலையில் பல விடுதலைப் போராளிகளையும் இளைஞர்களையும் காட்டுக்கொடுத்தவர்.

இதன் பின் யாழ்ப்பாணத்திலும் தனது உளவு வேலையைத் தொடர வந்திருந்தார்.

எமது தோழர்களின் பின் தொடர முயன்றபோது மக்கள் விடுதலைப்படையால் கைதுசெய்யப்பட்டு விசாரணையின் போது தனது தேசத்துரோக நடவடிக்கைகளை ஒத்துக் கொண்டார்.

– இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

இளைஞர் யுவதி கைது

திருகோணமலை, மே 26

திருகோணமலை நகரில் நேற்று 5 யுவதிகளும் 5 இளைஞர்களும் கொலைவாரால் கைது செய்யப்பட்டனர்.

வயிறு வகுப்புக்களில் கலந்து கொண்டனர் என்ற சந்தேகத்தின்மீது இவர்கள் கைதுசெய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மகாவிளாங்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து, நிகழ்வில் இலங்கைப்பிரதேச பிரிவேடிகர் ஹர்ஷா குணரத்நா, நிருவாக அரச அதிபர் கு. எக் ஸ்ரீவரதராஜ ஆகியோர் கலந்துகொண்டு வருகைதந்தோரை விருந்து செய்தனர்.

அப்பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றை தரப்பினரின் முயற்சியால் மாற்றுவது பற்றி பேசுவதாகவும் கூறப்பட்டது.

இந்தியாவுக்கு இது சிக்கலான காலம்

'இந்து'வில் ரெட்டி

புதுடில்லி, மே.26

இலங்கை, பஞ்சாப் நிலைமைகள் மோசமடைவதால் அடுத்த சில மாதங்களில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இந்தியா சிக்கலான நிலையை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

பிரபல அரசியல் விமர்சகர் ஜி. கே. ரெட்டி 'இந்து' நாளிதழில் மேற்கண்டவாறு எழுதியிருக்கிறார்.

இலங்கையில் தமிழர் தொடர்ந்து இன்னலுக்குள்ளாவது குறித்து தமிழ்நாட்டில் பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளது. இது புதுடில்லிக்கு சவாலை அளித்துள்ளது.

நிரு. ஜெயவர்த்தனாவின் மீது புதுடில்லி அரசு நம்பிக்கை இழந்து வருகிறது. இதனால் இந்திய கடுமையான போக்கைக் கடைப்பிடிக்க நேர்கிறது.

அண்மையில் இராணுவ நடவடிக்கையினால் வேல்வார்த்தை [மூலம் தீர்வு காணுவது விலகி கஷ்டமானதாகி விட்டது.

போராளிகளை இலங்கை அரசினால் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆனால் இலங்கை அரசின் நடவடிக்கைகள் மேலும் பிரச்சினையை ஆழமாக்கி விட்டன.

நற்போதைய சூழ்நிலையில் இரு தரப்பும் ஏற்கக் கூடிய தீர்வை உருவாக்கக்கூடிய சூழ்நிலை இல்லை.

இப்படி நிரு ரெட்டி 'இந்து' நாளிதழில் எழுதியிருக்கிறார்.

கொட்டடியில் நேற்று ஒருவர் சூட்டினால் காயம்

நல்லூர், மே 26

கோட்டைப் பகுதியை இருந்த நாரை நோக்கித் தீர்க்கப்பட்ட வேட்டுக்களினால் நேற்றும் இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

கொக்குவிலைச் சேர்ந்த வீரசிங்கம் சதீசகுமார் (16 வயது) என்ற இளைஞனே நேற்று காயமடைந்தவர்.

நேற்றுக்காலை பத்து மணியளவில் தாக்குதல் கண்டு சேதமடைந்த தமது வீட்டைப் பார்வையிடச் சென்றபோது மண்ணெண்ணெய் விநியோக வரிசையிலிருந்த வந்த வேட்டினால் இவர் காயமடைந்தார்.

இவரது வயிறும் நெஞ்சிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளன

மோதல் காரணமாக நகரில் 50 கடைகள் மூடப்பட்டுள்ளன

நல்லூர், மே 26

யாழ்ப்பாணக் கால் கொள்ளுறை விதியில் சி. எக். கே. சந்தியில் இருந்து யாழ்ப்பாணம் தபால் அதிகாரி வரை உள்ள வரிசையில் இருக்கும் சுமார் 50 கடைகள் வரிசை மூடப்பட்டிருக்கின்றன.

இதனால் இந்தக் கடைகளின் உரிமையாளர்களும், வேலையாட்களும் பெரிதும் பாதிப்படைந்திருக்கின்றனர்.

கடந்த சில தினங்களாக நகரில் நடந்தவரும் மோதலாளிகள் — சிப்பாய்கள் மோதல் காரணமாகவே இந்தக் கடைகள் மூடப்பட்டிருக்கின்றன.

ஆலமரத்தில் சடலம்

திருகோணமலை, மே 26

திருகோணமலைத் தொகுதியில் நிலாவெளி பிரதான வீதியில் ஆலமரத்தில் விழுந்த ஒரு ஆணின் சடலம் தொங்கிக் கொண்டிருக்க நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டது.

இச்சடலம் குருகாண்டி செல்வராசா என்பவருடையது என்று அடையாளம் காணப்பட்டது.

சோபாலபுரம் வாயோன இவருக்கு வயது 30

'தரோகி' என்று எழுதப்பட்ட அட்டை ஒன்று சடலத்துடன் கட்டப்பட்டிருந்தது.

கிளிநொச்சி

கலைவித்திணைக்கள கொடுப்பனவுகள் அங்கேயே கிடைக்கும்

உருத்திரபுரம் மே 26

இதுவரை ஆசிரியர்களின் சம்பள கொடுப்பனவுகளை மட்டுமே செய்துவந்த கிளிநொச்சி கல்வி திணைக்களத்தினர் தற்போது ஏனைய கொடுப்பனவுகளும் நடைபெறத் தொடங்கியுள்ளன.

ஆசிரியர்களின் சம்பளக் கொடுப்பனவு தவிர்ந்த ஏனைய அனைத்து கொடுப்பனவுகளும் இதுவரை வாழ் கல்வித் திணைக்களத்தினூடேயே வழங்கப்பட்டு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால்பாடசாலைகளுக்கான கொடுப்பனவுகள் காலதாமதமாகவே கிடைக்கப்பெற்றன.

இது சம்பந்தமாக கிளிநொச்சி மாவட்ட கல்விப்பணிப்பாளர் ஜனாப். எம். எம் மக்சூர் கல்வி அமைச்சுடன் தொடர்பு கொண்டு சரவ நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்.

அதனால் கிளிநொச்சி கல்வித் திணைக்களம் சம்பந்தப்பட்ட கொடுப்பனவு பகுதி வாழ் கல்வி திணைக்களத்திலிருந்து பிரிக்கப்பட்டு கிளிநொச்சி பகுதியில் தனியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அடுத்த தேர்தலை விட்டு அடக்கப்பட்ட மக்களை

பற்றிச் சிந்தித்தவர் சரத்

அஞ்சலிக் கூட்டத்தில் உரை

— அலுவலகச் செய்தியாளர்:- எஸ். ஜே. பி ரட்ணதுரை —

யாழ்ப்பாணம், மே 26

"அடுத்த தேர்தலை பற்றிச் சிந்திக்காமல் அடக்கப்பட்ட மக்களைப்பற்றி நினைத்திருந்தவர் தோழர் சரத்முத்தெட்டுவேகம.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி யாழ் மாவட்ட ஆலோசனைச் சபையினர் பொன். குலராசாமி இப்படிக் கூறினார்.

நல்லூர் இந்து விடுதியில் நேற்றுக்காலை நடைபெற்ற அமரர் சரத்முத்தெட்டுவேகவின் அஞ்சலிக் கூட்டத்தில் உரை யாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

தெற்கில் பலர் அமரராகியிருக்கிறார்கள். ஆனால் அஞ்சலிக் கூட்டம் நடைபெறுகிறது.

வடக்கேயும் பலர் அமரராகியிருக்கிறார்கள், இங்கேயும் அஞ்சலிக் கூட்டம் நடைபெறுகிறது

ஆனால் தெற்கில் இறந்த ஒரு தோழருக்கு வடக்கு, தெற்கு இரண்டிலும், இவரைப் முழுவதும் வேறுபடுகிறது அஞ்சலிக்கூட்டம் நடைபெறுவது இதுவே முதற் தடவையாகும்.

இவரதும் நிறைந்த இக்கால காலகட்டத்தில் இப்படி நிகழ்வது சரத்தின் பெருமையை எடுத்துக் காட்டுகிறது—என்றார்.

நிரு. ஆ. வைத்தியலிங்கம் கூறியதாவது "இன்று தமிழ் மக்களுக்கும் நாட்டுக்கும் ஏற்பட்டுள்ள இக்கட்டான பிரச்சினைகளை விடுத்து அன்றே தீர்க்கத் தரிசனமாகச் சொன்ன வர் அமரர் சரத்" என்று குறிப்பிட்டார்.

அரச லிபிதர் சங்கச் செயலாளர் நிரு. தவராஜா பேசுகையில், கலவரங்களைத் தொகுதிக்கு இடைத் தேர்தல் அன்றையில் நடக்கும்; அது சுதந்திரமான இடைத் தேர்தலாக இருக்கும் என்று அமரர் சரத் அன்றையில் கூறியிருந்தார். அந்த சுதந்திரமாக இப்படி ஒரு விரிதமான விளைவாக வரும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை" என்று குறிப்பிட்டார்.

இராணுவ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கேணி பாலசிங்கம் அரசுவலப் பேச்சுவார்த்தைப் பணியிலிருந்து வந்தார்.

வடமாகாணியில் கடந்த வாரம் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் பற்றி வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்களுக்கு விளக்கம் கொடுக்கப்பட்டதாக [illegible] கூறினார்.

[illegible] நிலவரம் பற்றி [illegible] கூறினார்.

நிர்மலா நாவரட்னம், ஜனாப். எம். எம். மக்சூர். முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தைச் சேர்ந்த நிரு. இ. முருகையன், நீர்வை பொன்னையன், முல்லைஎம் பி நிரு. எம். சி. சுப்பிரமணியம் ஆகியோரும் இக்கூட்டத்தில் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

'ஹெலி'யை நோக்கி வேட்டுக்கள்

நல்லூர், மே 26

ஹெலிக்கொப்டரை நோக்கிப் போராளிகள் தாக்குதல் நடத்தினர்.

இதனால் தரையில் பதற்றம் ஏற்பட்டது.

நேற்று பிற்பகல் 4 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து மேலாக ஹெலிக்கொப்டர் ஒன்று பறந்து வந்தது.

அதனை நோக்கிப் போராளிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதனையடுத்து ஹெலிக்கொப்டர் கூரை வழியாக பறந்து சென்றது.

எயர்லங்கா.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ணமும் பயணிகள் இல்லாததனால் ரத்தாகியது.

நேற்று லண்டனுக்கு செல்ல இருந்த எயர் லங்கா விமான சேவையும் பயணிகள் இல்லாததனால் ரத்தானது.

கம்டுநாயகா விமான ஓடுதளம் செப்பனிடும் பணி காரணமாக இவ்வாறு ரத்தாகியுள்ளது.

முழு நாட்டி:

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காலம்.

இந்தக் குழ்நிலையைப் பயன்படுத்தி எதிர்வினர் அரசைச் செயலாக கவிழக்கச் செய்வர்.

இப்படி அந்த குழுவுக்கு கருத்துப்பகிர்கின்றது.

இந்தியப் பயணிகளுக்கு கட்டுநாயக்காவில் அதிக செடுபிடி

கொழும்பு, மே 26

கொழும்பு வந்த திருப்பும் இந்தியப் பயணிகள் கட்டுநாயக்காவில் இப்போது பல செடுபிடிகளைச் சுவாவிக்க வேண்டியுள்ளதாம்

கட்டுநாயக்கா விமான ஓடுதளம் செப்பனிடும் பணி நடைபெறுவதால் பயணிகள் தமிழ் அகதிகளாக, ஊழியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டனர்.

அதன் பின்னர் தான் இச்செடுபிடிகள் அதிகரித்துள்ளனவாம். இந்தியாவில் இருந்து வரும் தமிழர் சஞ்சிகைகள், ஆங்கில சஞ்சிகைகள் முகவியலற்றன பெறச் சென்னைவர்களுக் மிகுந்த கஷ்டப்பட வேண்டியுள்ளதாம்

கூட்டமில்லா வெசாக்!

காமுறிபு, மே 26

கொழும்பு மாநகரசபை வெசாக் ஆலோசனைக் கூட்டம் அதிகமாகக் காணப்படவில்லை.

அறிவிப்பு பார்ப்பதற்கான மக்கள் கூட்டம் குறைவாகக் காணப்பட்டது.

குண்டுப் பீதி காரணமாக மக்கள் வெசாக் ஆலோசனைக் கூட்டங்களைப் பார்க்க வீதிகளுக்கு வரவில்லை.

முதலுதவி செய்வதற்கு முதலில் அவசியமானது எது?

மாவிப்பாய், மே 26

வைத்திய உதவி இல்லாத இடங்களில் முதலுதவியின் தேவை அவசியமாகின்றது முதலுதவி செய்வதற்கு ஜீவகாருண்ணிய உணர்வு நம்மிடையே இருக்க வேண்டும். இரக்க மனப்பான்மை இருக்க வேண்டும்

இவ்வாறு கூறினார் சென். ஜோன்ஸ் ஆம்புலன்சின் முதலுதவிப் பிரிவு பிரமுகரும் வர்த்தகரும் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவருமான நிரு. டயிலூ, எம். தேவகடாக்சம்.

நவாலி மாவித்தியாலய மாணவர்களுக்கான முதலுதவி வகுப்புக்களை நிரு. தேவகடாட்சம் ஆரம்பித்து வைத்து உரையாற்றினார்.

மாவித்தியாலய அதிபர் நிரு. செ. கதிர்காமத்தம்பி இவ்வைபவத்துக்கு தலைமை வகித்தார்.

நிரு. தேவகடாக்சம் தனது உரையின்போது ஆண்களிடம் பெண்களுக்கு இயற்கையாகவே இரக்கம், பொறுமை, சாந்தம் ஆகிய குணங்கள் உள்ளன. இதனால் தற்காலத்தில் ஆண்களை விட பெண்களே முதலுதவி செய்வதில் முன்னிற்கிறார்கள் என குறிப்பிட்டார்.

அதிபர் நிரு. செ. கதிர்காமத்தம்பி தனது தலைமையுரையில், முதலுதவி வகுப்புக்களில் பயிற்சி பெறுவதால் சாதாரண பாதிரங்களிலும் பொறுமை தொடு நிலையைக் தேவையான இடத்தில் முதலுதவியை செய்ய தவறக் கூடாது என்றார்.

முதலுதவி வகுப்பு ஆசிரியர் நிரு. கே. ஜனகக் நன்றி கூறினார்.

குடும்பஸ்தருக்கு மரணதண்டனை

மட்டக்களப்பு, மே 26

மட்டக்களப்பு-கல்முனை வீதியில் நாவற்குடாவில் நேற்று இளம் குடும்பஸ்தர் ஒருவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

உருத்திரகுமார் (வயது 26) என்ற நபரே உயிரிழந்தவர் ஆவார்.

ஒன்றரை மாதத்திற்கு முன்னர் தான் இவர் நடு மணம் செய்தார் என்று கூறப்படுகிறது.

தனது மனைவியை வெளிநாட்டிற்கு அனுப்பி விட்டு கடந்த வெள்ளிக் கிழமை வீடுதிரும்பிய இவர்—

சமூக விரோத செயல் ஒன்றில் ஈடுபட்டிருந்த போது சில இளைஞர்களினால் அடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

விசேட அறிவித்தல்

த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ் 42, 44, பெரியகடை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்திருந்த எமது ஸ்தாபனம் அண்மையில் ஏற்பட்ட அனர்த்தங்களால் 272 (352), நாவலர் வீதியில் அமைந்திருக்கும் எமது இல்லத்தில் தொடர்ந்து இயங்கி வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாடிக்கையாளர்கள் குறிப்பிட்ட முகவரியுடன் தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

த. குமாரசாமி
ரெக்ஸ்ரைல்ஸ்
272 (352), நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், கிட்டிசர் நிலையத், இரண்டாம் ஒழுங்கை, 18 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்லிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் கிறாவன்தாராம், அவர்களது அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

வெளியிட்ட திகதி: 26 - 05 - 1986

Printed and Published by Uthayan Publications (Private) Ltd; 14, Second Lane, Power House Road, Jaffna

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka. [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org